**செ. கு. எண்: 239** **நாள்: 24.12.2018**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி**</u>

<u>அவர்களின் அறிக்கை – **24.12.2018**</u>

**திண்டுக்கல் மாவட்டம்,** பழனி வட்டம், பாலாறு பொருந்தலாறு அணையிலிருந்து, பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், பாலாறு பொருந்தலாறு அணையிலிருந்து இடது பிரதானக் கால்வாயின் பாசனபரப்பிலுள்ள **16** கிராமங்களின் பாசனத்திற்காகவும் பச்சையாறு முறைசாரா குளங்களிலுள்ள குடிநீர் ஆதாரங்கள் மற்றும் இடது பிரதானக் கால்வாயின் எல்லைக்குட்பட்ட குடிநீர் ஆதாரங்களுக்காகவும் **28.12.2018 முதல் 27.3.2019** வரை தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால் திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டத்திலுள்ள **9600 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், விவசாயப் பெருமக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி, நீர் மேலாண்மை மேற்கொண்டு உயர் மகசூல் பெற வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**